செ.வெ.எண்: 37 நாள்: 20.01.2018

திருநெல்வேலியில் மகளிர் உரிமைகள் மற்றும் பாதுகாக்கும் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள்,கூடுதல் மாவட்ட நிதிபதிகள் திரு.அப்துல் காதர், திருமதி சந்திரா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

---

திருநெல்வேலி மாவட்ட நிதிமன்ற வளாகத்தில் சட்ட பணிகள் முகாம் களம் இன்று (20.01.2018) நடைபெற்றது. முன்னதாக தேசிய மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி சமூக நலத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் உரிமைகள் மற்றும் பாதுகாக்கும் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள்,கூடுதல் மாவட்ட நிதிபதிகள் திரு.அப்துல் காதர், திருமதி சந்திரா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இப்பேரணியில் சமூகநலத்துறை அரசு சேவை இல்லம்,புஸ்பலதா மெட்ரிக் மேல்நிலை பள்ளி,சாராள் தக்கர் மேல்நிலை பள்ளி, ஆதித்யா மெட்ரிக் மேல்நிலை பள்ளி, பெல் மெட்ரிக் மேல்நிலை பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.இப்பேரணியல் மாணவிகள் பெண்களின் உரிமைகள்,பெண்களை பாதுகாக்கும் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும், கோசமிட்டும் சென்றனர். பேரணி நிதிமன்றம் வளாகத்தில் தொடங்கி பெல் மைதானம் வரை சென்று நிதிமன்றம் வளாகத்தில் முடிவடைந்தது.

முன்னதாக சட்ட பணிகள் முகாம் களம் நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை நவீன எல்.இ.டி வாகனம் மூலம் சட்ட விழிப்புணர்வு மற்றும் அரசு திட்டங்கள் குறித்த வீடியோ படம் காண்பிக்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள்,கூடுதல் மாவட்ட நிதிபதிகள் திரு.அப்துல் காதர், திருமதி சந்திரா ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு செயலர் திரு.ராமலிங்கம், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி